# திரைப்பாடல் தொகுப்பு முயற்சி (சுவைஞன் பார்வையில் ஒரு முன்னோட்டம்) (Cinema the songwriting package (a preview of the taster view))

**ப.கிருஷ்ணமூர்த்தி | *P. Krishnamoorthi*[7]**

**Abstract:** This article emposise the necessity or the importance of collecting the Tamil Film Songs. It also explains the methodology and Themotology when the collection is taking place.

கடந்த நூற்றாண்டில் எளிமையான மனித உள்ளங்களின் இன்றியமையாத இலக்கியமாகவும் பொழுதுபோக்காகவும் திகழ்ந்து வந்தவை திரைப்பாடல்களாகும். இவை ஒரு நூற்றாண்டின் ஆகப் பெரிய இலக்கியத் தொகுதியாகும் முழுத் தகுதியையும் பெற்றுள்ளவை. நாட்டுப் பாடல்கள் இருந்த இடத்தைத் தக்க வைத்துக் கொண்ட திரைப்பாடல்கள் உள்ளங்களிலும் உதடுகளிலும் மீண்டும் மீண்டும் உலா வந்து கொண்டிருப்பவையாகும். இருபதாம் நூற்றாண்டின் அரை நூற்றாண்டுக் காலத்திய அரசியலைத் தீர்மானித்த ஆற்றல் பெற்ற இப்பாடல்கள் பொதுமக்களின் மனங்களை விட்டு நீங்கி, தொகுப்புக்குள்ளாகும்போது 'தீவிர' இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் திறனாய்வாளர்களின் கவனத்தைப் பெறும் என நம்பலாம். அவ்வகையில் இவற்றைத் தொகுப்பதாயின், அத்தொகுப்புமுறை எவ்வகையில் அமையலாம் என்னும் ஒரு பொதுவான பார்வையை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**குறிச்சொற்கள்** : திரைப்பாடல், தொகுப்பு, முயற்சி, சுவைஞன், பார்வை, முன்னோட்டம்

***Citation:*** *கிருஷ்ணமூர்த்தி ப., (February 2021), "திரைப்பாடல் தொகுப்பு முயற்சி (சுவைஞன் பார்வையில் ஒரு முன்னோட்டம்) (Cinema the songwriting package (a preview of the taster view))", IIETS (Inam: International E-Journal of Tamil Studies) (ISSN:2455-0531), Vol.6, Issue 25, pp.37-15*

***

## தமிழில் தொகுப்பு முயற்சி

பண்டைத் தமிழ் இலக்கியம் தொடங்கி அவ்வக்காலங்களில் இலக்கியங்களைத் தொகுத்துத் தருகின்ற முயற்சி தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே ஆம். சங்க இலக்கியம் பதினெண் மேல்கணக்கு எனவும், சங்க மருவிய கால இலக்கியம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் தொகுக்கப் பட்டுள்ளன. சைவ மற்றும் வைணவ பக்திப் பாடல்கள் முறையே திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனத் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆய்வு முயற்சியின் ஒரு பகுதியாக விளங்கும் இத்தொகுப்பு முயற்சி தற்காலத்திலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஒரு படைப்பாளரின் படைப்புகள் அனைத்தையும் தொகுத்தல், அவருடைய படைப்புகளில் ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகையை மட்டும் தொகுத்தல், படைப்பில் சிறந்தவற்றை மட்டும் தொகுத்தல் என தொகுப்புக்கான காரணிகள் வெவ்வேறு வகையாக அமைந் துள்ளன. சங்க இலக்கியங்களை இன்று ஒவ்வொருவரும் தத்தமது ஆய்வு அல்லது விருப்பத்துக்கேற்றவாறு தொகுக்கும் முயற்சிகளும் நடைபெற்றுள்ளன. அவ் வகையில் ஒரு நூற்றாண்டின் அரசியலைத் தீர்மானித்த திரைப்படங்களின் சிறப்பான கூறாக விளங்கும் திரைப்பாடல்கள் தொகுப்பும் தமிழில் ஆற்றப்பட வேண்டிய இன்றியமையாப் பணி ஆகும்.

## தமிழ்த் திரைப்படங்களும் பாடல்களும்

பத்தொன்பதாம் நூற்றாண்டு மேடை நாடகங்களின் 'ஒளிப்படப் பதிப்பாகவே' துவக்க காலத் தமிழ்த் திரைப்படங்கள் விளங்கின. எனவே, நாடகங்களில் இடம் பெற்ற பாடல்கள் அனைத்தும் பெரு மளவில் அப்படியே இடம்பெற்றன. ஒரு திரைப்படத்தில் அறுபது பாடல்கள்

[7] தமிழ் - உதவிப் பேராசிரியர், பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

இடம்பெற்று, அது சிறப்பான கூறாகக் கொள்ளப்பட்டு விளம்பரமும் செய்யப்பட்டிருந்ததை ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். ராஜா – ராணிக் கதைகளி லிருந்து விடுபட்ட தமிழ்த் திரைப்படம் சமூகவயமானதைத் தொடர்ந்து பாடல்களின் எண்ணிக்கையும் அதற் கேற்றாற் போல குறையத் தலைப்பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் ஒரு திரைப்படத்திற்குச் சராசரியாக ஆறு பாடல்கள் என்ற அளவில் பாடல்கள் இடம் பெற்றிருந்தன என ஒருவாறு உறுதி செய்ய முடிகின்றது.

இப்பாடல்களின் பொருளமைதியை நோக்கின், அவை பல திறத்தனவாக உள்ளன. தாலாட்டு முதல் சவ ஊர்வலம் வரையிலான வாழ்வின் அனைத்து நிலைகளையும் இப்பாடல்கள் உரிப் பொருளாகக் கொண்டுள்ளன. தனிமனிதன் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் அதற்கேற்ற எனது பாடல் ஒன்று உண்டு என்று கவிஞர் கண்ணதாசன் பிரகடனம் செய்வது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. இதனடிப்படையில் வாழ்வின் அனைத்து நிலைகளையும் படம்பிடித்துக்காட்டும் ஆற்றல் வாய்ந்தவை இத்திரைப்பாடல்கள் எனலாம்.

எனவே, இத்திரைப்பாடல்களுக்கெனக் குறிப்பிட்ட உரிப்பொருளை நாம் வரையறுக்க இயலாது என்பதே இவற்றின் தனிச்சிறப்பாக அமைகின்றது. ஏனெனில், திரைப்பாடல்களுக்கு முந்தைய தமிழ் இலக்கியப் படைப்புகளின் உரிப்பொருள் அல்லது பாடுபொருள்களாக எவை யெல்லாம் இருந்தனவோ அவையனைத்தும் திரைப் பாடல்களின் பாடுபொருள்களாக இருக்கின்றன. இதனால் இத்திரைப் பாடல்களை ஒரு குறிப்பிட்ட உரிப் பொருளுக்குள் அடைவுபடுத்த வியலாது. மாறாக, பாடலில் இடம்பெறும் உரிப்பொருளுக் கேற்றவாறு பாடல்களைத் தொகுத்து அடைவு செய்யலாம்.

**பாடற்றொகுப்பு : காலமும் பொருளும்**

மிக அண்மையில் தமிழ்த் திரையுலகம் தனது எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடியது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. 1931இல் தமிழுக்கு அறிமுகமான திரைப்படம், தனது துவக்க ஆண்டிலிருந்து முதல் பதினைந்து ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டும் எண்ணிக்கையில் கூடிக் குறைந்த வண்ணமே வெளிவந்தன. இக்கட்டுரை யாளர் சேகரித்த உறுதிப்படுத்தவியலாத தகவல்களின் அடிப்படையில் 1934 முதல் 1994 வரையிலான அறுபதாண்டுக் காலத்தில் மட்டும் திரைப்படங்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 3500 ஆகும். ஒவ்வொரு திரையிலும் பாடல்களின் எண்ணிக்கை சீராக இருப்பதற்கு வாய்ப்பில்லை. திரைக்கதை அமைப்புக்கு ஏற்றவாறு பாடல்கள் நிறைந்தோ குறைந்தோ இடம்பெற்றிருக்கும்; சிலவற்றில் (அல்லது ஒன்றிரண்டு) பாடல்களே இல்லாத நிலையும் காணப் படுகின்றது. எனவே, சராசரி மதிப்பில் ஒரு திரைக்கு ஆறு பாடல்கள் என்னும் எண்ணிக்கையை வைத்துக்கொண்டால் 3500 திரைகளுக்குச் சுமார் 21000 பாடல்கள் எனக் கணக்கிடலாம். பன்னிரு திரு முறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றிலுள்ள பாடல்களின் கூட்டுத் தொகைக்குச் சமமாக இத்திரைப் பாடல்களின் எண்ணிக்கை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

துவக்கத் திரைப்பாடலிலிருந்து இன்றுவரை சற்றேறக்குறைய எண்பத் தைந்து ஆண்டு காலத் திரைப்பாடல்கள் நம்மிடையே உலா வந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் எல்லாப் பாடல்களும் எல்லோராலும் எக் காலத்திலும் கேட்கக் கூடுமானவையாக இல்லை என்பது தேற்றம். ஒருவருக்கு விருப்பமில்லாத பாடல் மற்றவருக்கு விருப்பத்தைத் தூண்டுகின்ற நிலையும், அனைவரும் விரும்புகின்ற ஒரு பாடல் ஒருவருக்கு மட்டும் விருப்பத்தைத் தராத நிலையும், ஒரே ஒருவர் விரும்புகின்ற பாடல் பொதுவான விருப்பத்தைப் பெறாத நிலையும் இப்பாடற் சுவைப்பில் உண்டு.

எனவே, பாடற்றொகுப்பில் மேற்கொள்ள வேண்டிய கால எல்லையைத் தீர்மானம் செய்தல் வேண்டும் என்பதே முதல் தேவையாக இருக்கின்றது. பாடல்களின் தரத்தையும் கால எல்லையையும் தொடர்புபடுத்திப் பார்ப்பது பொருத்தமில்லை யாயினும், நடப்புக் காலத்திலிருந்து பின்னோக்கிச் செல்லும்போது பாடல்களின் தரம் மேம்பட்ட நிலையிலிருப்பதைத் தெரியலாம். இங்கு மேம்பட்ட நிலை எனக் குறிப்பிடப் படுவது, கவிதை அல்லது பாடற் கூறுகள், இசைக் கோவை, இசைச் சேர்க்கை, தகுந்த குரல்வளம் போன்றவை முறையே கருத்துவளத்துடனும் பொருத்தமாகவும் அமைந்திருத்தலையே ஆகும். மேலும், இசையில் அமிழ்ந்து போகாத சொற்றெளிவையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வகையிலான ஒரு வரையறை உருவாக்கப்படுமே யானால் 1955 – 1987 வரையிலான திரைப்படப் பாடல்களையே தொகுப்புக்குப் பயன்படுத்த முடியும். 1934 முதல் 1954 வரையிலான

பாடல்களில் சிலவற்றைத் தவிர, பிறவனைத்தும் கிடைக்குமா என்னும் ஐயமும் உள்ளது. மேலும், திரைப்பாடல் ஒரு சரியான வடிவத்தைப் பெறுவதற்கு முன்பாக, அவை தெலுங்குக் கீர்த்தனைகள் போன்ற அக்கால இசை வடிவத் தாக்கத்தால் 'வாய்ப்பாட்டுக் கச்சேரிகள்' நிலையிலேயே இருந்தனவாதலால் அவற்றைத் திரைப் பாடல் எனக் கொள்ளலாகுமா என்னும் கேள்வியும் நம்முன் நிற்கின்றது. புதிய நூற்றாண்டுக்குப் பிந்தைய திரைப் பாடல்களின் தரமும் இலக்கியத்துக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை.

**பாடல் சேகரிப்பு : இருப்பும் சிறப்பும்**

திரைப்பாடல்கள் இன்று பரவலாக அனைத்து இடங்களிலுமே கிடைக்கப் பெற்று வருகின்றன. துவக்க காலத்தில் வானொலி நிலையங்கள் வாயிலாகவும், ஆங்காங்கே இருந்துவந்த பாடல் பதிவகங்கள் மூலமாகவும் மக்களிடையே பாடல்கள் பெரும் புழக்கத்தில் இருந்தன. தற்காலத்தில் வானொலி கேட்போரின் எண்ணிக்கை சுருங்கி, தொழில்நுட்ப வளர்ச்சியில் பாடல் பதிவகங்களும் அருகி விட்டன. இதனால் கேட்போர் இல்லாத பாடற் றட்டுகளும், ஒலிப் பேழைகளும் சிதைந்து, அழிவுக்குள்ளாகி விட்டன. அடுத்து, துவக்க காலத்தில் வெளிவந்த, சற்றேறக்குறைய பதினைந்து ஆண்டுக் காலப் பாடல்களில் பலவும் இன்று முழுமையாகக் கிடைக்கும் என்று நம்புவதற் கியலாது. குறிப்பாக, 'கிராமபோன் ரிகார்டுகள்' கிடைப்பது சாத்திய மற்ற ஒன்றே. ஏனெனில், அக்காலத்திய பாடல், இசை, குரல், அதன் வடிவம் போன்றவை அதற்கடுத்த பத்தாண்டுகளிலேயே சுவைப்புத் தன்மையிலிருந்து அகன்றுவிட்டன. இதனால் அவற்றைக் கேட்போரில்லாமல் ஒருசிலவற்றைத் தவிர, கிடைக்குமா என்பதும் ஐயத்துக் கிடமாகவே இருக்கின்றது.

இனி, தொகுப்பில் இடம்பெற வேண்டியது ஒரு திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பாடல்களுமா அன்றி, பொருட்சிறப்புப் பெற்ற பாடல்கள் மட்டுமா என்னும் வினா நம்முன் எழுகின்றது. தொகுப்பு என்பது ஆய்வின் ஒரு பகுதியாக இருப்பதால் பாடல்களை 'ஆய்ந்து' எடுத்தும் தொகுக்கலாம்; அல்லது ஒரு காலத்திய பாடல்கள் இப்படித்தான் இருந்தன என்பதை வருங்காலத் தலைமுறையினருக்கு எடுத்துக்காட்ட அனைத்துப் பாடல்களையும் தொகுத்து வைக்கலாம்.

**தொகுப்பு வடிவம் : அச்சும் ஒலியும்**

திரைப்பாடல்கள் தொகுக்கப்படுமாயின், அவற்றை எந்த வடிவத்தில் தொகுப்பது என்பது ஆகப் பெருங்கேள்வி. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தொடங்கி, தற்காலம் வரையிலும் நிலைத்து நிற்பன அனைத்தும் இசையூட்டப்பட்ட பாடல் வடிவிலானவையே ஆகும். சங்க இலக்கியங்கள், திருமுறைகள், பாசுரங்கள் போன்றவை பாடப்பட்ட காலத்தில் அவற்றின் பாடும் முறை, இசை மரபு போன்ற எவற்றையும் நாம் அறியக் கூடவில்லை. மேலும், அவற்றின் ஒலிவடிவங்களைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொணரும் வாய்ப்பும் அக்காலத்தில் இல்லாமற் போய்விட்டது நமது தவக்குறைவே. ஆயின், திரைப்பாடல்கள் அவ்வகையில் 'நல்வாய்ப்பு' பெற்றவையே. அவற்றை, அவை உருவான பாடல் வடிவங்களிலேயே தொகுத்துப் பாதுகாத்து வைக்கப் போதுமான வழிமுறைகள் நமக்கு இருக்கின்றன. இணையம் முதலான ஊடகவழித் தொகுப்பே இப்பாடல்களைத் தொகுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஏற்ற வழிமுறையாக இருக்கும். பாடல்களைச் சரியான குறியீட்டுச் சொற்களைக் கொண்டு தேடியெடுத்துப்பயன்கொண்டு துய்ப்பதற்கு இம்முறையே பொருத்தமானதாம்.

**ஒலி மற்றும் அச்சு வடிவத் தொகுப்புகள்**

கடந்த ஆண்டுகளில் அச்சு மற்றும் ஒலிவடிவத் தொகுப்பு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. கண்ணதாசனின் திரைப்பாடல்கள் ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அஃதேபோல் மருதகாசியின் பாடல்கள், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாடல்களும் தொகுபட்டுள்ளன. வைரமுத்து தனது பாடல்களில் சிறந்த ஆயிரம் பாடல்களைத் தானே தொகுத்துத் தந்துள்ளார். தஞ்சை ராமையாதாஸ் பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புச் சான்றுகள் அச்சு வடிவிலான தொகுப்பில் பாடலாசிரியர்கள் முதன்மை பெறுவதைக் காட்டுகின்றன. ஆயின், ஒலி வடிவத்தில் இசையமைப்பாளரும் அதற்கடுத்த நிலையில் பாடுநரும், சற்று முற்பட்ட காலத்திய பாடல்களில் நடிகரும் முதன்மை பெறுவதைக் காண முடிகின்றது. ஒலி வடிவங்கள் அனைத்தும் இணைய தளங்களில் வேண்டுகின்ற குறியீட்டுச் சொற்களை உள்ளிட்டுப் பெறமுடிகின்றது.

**துணைநின்றவை**

*அமுதன் & வீரப்பன், ப (ப.ஆ.), 1999, உடுமலை நாராயணகவி பாடல்கள், உடுமலை: உடுமலை நாராயணகவி அறக்கட்டள,.*

*ரவீந்திரன், த. ரா. (தொ.ஆ), 2006, கவி.தஞ்சை.ராமையாதாஸ் திரைப்படப் பாடல் திரட்டு, சென்னை: நந்தா பதிப்பகம். (கையெழுத்துப் படி)*

*கண்ணதாசன், 2010-2014, திரை இசைப் பாடல்கள் (ஐந்து தொகுதிகள்), சென்னை: கண்ணதாசன் பதிப்பகம்.*

*……………..., 1986, திரைக்கவி திலகம் அ. மருதகாசி பாடல்கள், சென்னை: பரணி பதிப்பகம்.*